(6 pages) **Reg. No. : .....**

Code No. : 7433 **Sub. Code : HTLM 41**

M.A. (CBCS) DEGREE EXAMINATION,
APRIL 2016.

Fourth Semester

தமிழ்

பண்டை இலக்கியம்

(For those who joined in July 2012 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

1. சேரர் வரலாற்றை அறிய உதவும் நூல் எது?

(அ) பதிற்றுப்பத்து (ஆ) பரிபாடல்

(இ) புறநானூறு (ஈ) சேரதாண்டவம்

2. பாணர் பத்தில் பாணர்கள் பாடிய பண் வகை எது?

(அ) நெய்தல்பண் (ஆ) முல்லைப்பண்

(இ) செவ்வழிப்பண் (ஈ) பாலைப்பண்

3. இரவு நேரத்தில் மீன் வேட்டையாட மீனவர்கள் எதை எடுத்துச் சென்றுள்ளனர்?

(அ) உணவு (ஆ) கோல்

(இ) சுடர் விளக்கு (ஈ) ஈட்டி

4. மகளிர் கூடி ஆடும் கூத்தின் பெயர் என்ன?

(அ) வரிக்கூத்து (ஆ) தெருக்கூத்து

(இ) சாந்திக்கூத்து (ஈ) துணங்கைக் கூத்து

5. நெடுஞ்சுனை விளைந்த தேறலை நீர் என உண்ட உயிரினம் எது?

(அ) ஆமான் (ஆ) மான்

(இ) கடுவன் (ஈ) மந்தி

6. கலித்தொகையில் பாலைத்திணைப் பாடல்களைப் பாடிய புலவர் யார்?

(அ) பேயனார் (ஆ) பெருங்கடுங்கோ

(இ) இளங்கடுங்கோ (ஈ) பரணர்

7. நோதிறம் என்னும் பண்ணில் எந்த இலக்கியம் அமைந்துள்ளது?

(அ) பரிபாடல் (ஆ) கலித்தொகை

(இ) புறநானூறு (ஈ) திருமுருகாற்றுப்படை

Nesamony Memorial Christian College, Marthandam

8. கண்ணகிக்கு இமயமலையில் இருந்து கல்லெடுத்து வந்த சேரமன்னன் யார்?

(அ) இளங்கோ (ஆ) செங்குட்டுவன்

(இ) சேரமான்பெருமாள் (ஈ) இளஞ்சேரன்

9. புலவராற்றுப்படை என்று எந்த இலக்கியம் அழைக்கப்படுகிறது?

(அ) சிறுபாணாற்றுப்படை

(ஆ) மலைபடுகடாம்

(இ) திருமுருகாற்றுப்படை

(ஈ) பொருநராற்றுப்படை

10. முல்லைப்பாட்டு இயற்றியவர் யார்?

(அ) நக்கீரர் (ஆ) நல்லந்துவனார்

(இ) நன்முல்லையார் (ஈ) நப்பூதனார்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

11. (அ) 'சங்க கால நால்வகைப்' பிரிவினைப் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) 'பாலை நில மக்களின் தொழில்கள்' யாவை?

12. (அ) கண்ணகத்து எழுதிய குரீஇப் போலக் கோல்கோண்டு அலைப்ப.... இவ்வடியை விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவன் திருமண ஏற்பாடுடன் வந்தமையைக் குறுந்தொகைத் தோழி எவ்வாறு வெளிப்படுத்துகிறாள்?

13. (அ) இரவுக் குறியின் வழி ஏதங்களால் இனிப் பகலில் வருமாறு அகநானூற்றுத் தலைவி கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) இடைச்சுரத்தில் முக்கோல் பகவர், செவிலிக்குக் கூறிய அறிவுரைகள் யாவை?

14. (அ) வையை வரவும், அதன் விளைவும் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) குட்டுவனின் கொடைச்சிறப்பினை விளக்குக.

15. (அ) துணங்கைக் கூத்தினைப் பேய்மகளிர் எவ்வாறு ஆடினர்?

(அல்லது)

(ஆ) முதுபெண்டிர் நற்சொல் கேட்கும் பழக்கத்தை முல்லைப்பாட்டின்வழி விளக்குக.

Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

16. (அ) அகத்திணை ஏழு என்பது போலப் புறத்திணையும் ஏழு என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) பண்டைத் தமிழரின் திருமண முறை எவ்வாறு இருந்துள்ளது? ஆய்க.

17. (அ) தலைவன் சிறைப்புறமாக இருக்க நற்றிணைத் தோழி அவனுக்கு எவ்வாறு அறிவுறுத்துகிறாள்?

(அல்லது)

(ஆ) பாணனிடம் ஐங்குறுநூற்றுத் தலைவி கூறிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. (அ) பாண்டியன் அறிவுடைநம்பியின் குறிஞ்சித்திணைப் பாடல் கூறும் அறிவுரைகள் யாவை?

(அல்லது)

(ஆ) பாடாண்திணையை விளக்கி, இத்திணையில் கபிலர் பாடிய பாடல் ஒன்றை விளக்குக.

19. (அ) தலைவி ஊடல் கொண்ட செய்திகளை நல்லந்துவனார் பாடல்வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) குட்டுவனைத் திருவோலக்கத்தில் கண்டோர் எவ்வாறு வாழ்த்தினர்?

20. (அ) சூரர மகளிரின் இயல்பினை நக்கீரர் எவ்வாறு இயம்புகின்றார்?

(அல்லது)

(ஆ) பாசறையில் அரசன் எவ்வாறு சிந்திக்கின்றான் என்பதை ஆய்க.

———————

Nesamony Memorial Christian College, Marthandam